மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்
செயல்முறைகள், சென்னை – 06.
ந.க.எண். 000523/எஃப் 1/2023 நாள் 13 .06.2023

பொருள்: சென்னை– 6 – மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் நிறுவனம் – ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி – 6–10 ஆம் வகுப்பு கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் குறு / வட்டார வளமைய கூட்டம் 17.06.2023 அன்று நடைபெறுதல் – தொடர்பாக.

பார்வை:
1. 2023 – 2024ஆம் ஆண்டிற்கான பயிற்சி கால அட்டவணை.
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனஇயக்குநர் தலைமையில் நடைபெற்ற மீளாய்வு கூட்டம் நாள். 06.05.2023.
3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் நிறுவன இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 09.06.2023.

-----

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறை இணைந்து ஆசிரியர்களுக்கு பல்வேறு ஆசிரியர் பணித்திறன் மேம்பாட்டு பயிற்சிகளை (Teacher Professional Development) 2023–2024 ஆம் கல்வியாண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக ஆசிரியர்களுக்கு மாநில அளவில் முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சி 30.05.2023 மற்றும் 31.05.2023 அன்று நடத்தப்பட்டது. இரண்டாம் கட்டமாக மாவட்ட கருத்தாளர்களுக்கான பயிற்சி 08.06.2023 மற்றும் 09.06.2023 ஆகிய தேதிகளில் அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்றது.

பார்வை 3–ல் காணும் செயல்முறைகளின்படி 6–10 ஆம் வகுப்பு கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் 10.06.2023 அன்று நடைபெற இருந்த குறு / வட்டார வளமைய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அக்கூட்டம் மீண்டும் 17.06.2023 அன்று நடைபெறவுள்ளதால், அனைத்து மாவட்டக் கருத்தாளர்களும் மற்றும் 6–10 ஆம் வகுப்பு கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் மற்றும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3/3

13.06
இயக்குநர்
13/6/23

பெறுநர்
1. அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.
2. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்
1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–06 தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. மாநிலத்திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–06
4. கோப்பிற்கு.